★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 23 ரபி. ஆகி 21 இதழ் 358

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5—2—83

## ஈழ மாணவர் மன்றம் நடத்திய சைக்கிள் ஊர்வலம்!

### கொடும்பாவியும் எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஈழமாணவர் பொதுமன்றத்தைச் சேர்ந்த சுமார் 100 உறுப்பினர்கள் நேற்றுக்காலை சைக்கிள் ஊர்வலமொன்றை யாழ். நகரில் திடீரென நடத்தினர்.

யாழ். பல்கலைக்கழக வீதி வழியாக மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் வந்தடைந்ததும் "நவபாஸிஸ்டுகளுக்கு மரணம்" என்ற கோஷம் எழுப்பிக்கொண்டு 'பாஸிஸ' கொடும்பாவியை எரித்தனர்! பின்னர் அமைதியாக பல்கலைக்கழக வளவுக்குள் சென்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

ஈழமாணவர் பொது மன்ற நிர்வாகச் செயலாளர் திரு. டேவிட்சன் தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு திருநெல்வேலி சந்தையிலிருந்து சைக்கிளில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் புறப்பட்டது. ஆடியபாதம் வீதி, கொக்குவில், யாழ். இந்துக்கல்லூரி, கஸ்தூரியார், வைமன் வீதிகளூடாக சிவன்கோவில் வீதி வந்து பின்னர் பலாலி வீதி வழியாகப் 11-45க்கு யாழ். பல்கலைக்கழக வீதியை ஊர்வலம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

"எங்கள் சக்தி மக்கள் சக்தி' ஈழமாணவர் போராட்டம் வெல்க' போன்ற சுலோகங்களை கோஷித்த வண்ணம் சுலோக அட்டைகளை தாங்கி ஊர்வலம் சென்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

★ யாழ். பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதப் போராட்டம்:

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் அவை ஆதரவு!

### சங்கக் கிளை தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளை ஒன்று தீக்கிரையானது.

நேற்று முன்தினம் அதிகாலை இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேரில் உறுதி அளித்தனர்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அனைத் திலங்கை பல்கலைக்கழக மாணவர் அவை முழு ஆதரவும் அளிக்க முன் வந்துள்ளது.

நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக மாணவரின் முதல் கட்ட நான்கு நாள் உண்ணாவிரதப் போராட்ட முடிவில் பேராதனை உட்பட தென்னிலங்கையிலுள்ள கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர களனி மொறட்டுவ, பல்கலைக்கழக மாணவர் மன்றத்தலைவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியதுடன் யாழ். மாணவர்களின் போராட்டத்துக்கு முழு ஆதரவும் அளிப்பதாகவும் உறுதி அளித்துள்ளனர்.

அனைத்திலங்கை பல்கலைக் கழக மாணவர் அவைத்தலைவர் திரு. மஹிந்த புஸ்பகுமார நேற்று மாலை உவரயாற்றுகையில் முழு ஆதரவும் அளிப்பதாக உறுதியளித்தார்.

யாழ். பல்கலைக் கழக வளவில் நான்கு நாட்களாக தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்துவந்த மாணவ மாணவிகள் மத்தியிலேயே திரு. புஷ்பகுமார இந்த உறுதியை அளித்தார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள், மதகுருமார், விரிவுரையாளர் தம்பதிகள், வைத்தியர் ஆகி

(8ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் நடந்த சுதந்திரதின விழா

## அடுத்த 6 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக பதவி ஏற்றார்!

(இ. கந்தசாமி)

இலங்கையின் முப்பத்தைந்தாவது சுதந்திரதின வைபவம் நேற்று காலிமுகக் கடற்கரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் கொண்டாடப்பட்டபோது, காலை 8-01 சுபநேரத்தில், அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஜனாதிபதி ஜயவர்த்தனா தம்பதியர் காலிமுகத்திடலில் விசேடமாக அமைக்கப்பட்ட அரங்குக்கு வந்தபோது அவர்களை பிரதமர் பிரேமதாசா

(8-ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். - கலைஞர் நேற்றுச் சந்தித்தனர்!

சென்னை பெப் 4

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனை திராவிட முன்னேற்றக்கழகத்தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி இன்று சந்தித்துப் பேசினார்.

தமிழக சட்டசபைக்கூட்டத் தொடர் இன்று ஆரம்பமானது. தமிழக முதல்வரும், கலைஞரும் கலந்து கொண்டனர்.

[8ம் பக்கம் பார்க்க]

சுதந்திரதினம் - உண்ணாவிரதம்

## மன்னாரில் நேருக்கு நேர் நடந்தது

(மன்னார்)

சுதந்திரதின விழாவும், உண்ணாவிரதமும் மன்னாரில் நேற்று எதிர் எதிராக நடைபெற்றது.

மன்னார் திறந்தவெளி அரங்கில் அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே. செந்திநாதன் தேசியக்கொடியை ஏற்றி சுதந்திர தின நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். அதேநேரத்தில் அரங்குக்கு எதிராக உள்ள புனித மாதா கோவிலில், முன்றலில் மன்னார் மாணவர் அணியின் ஆதரவில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

சுதந்திரதின நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவ மாணவிகளின் அணிவகுப்பும் மற்றும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

உண்ணாவிரதத்தில் மன்னார் எம். பி. திரு. பி. சூசைதாசன். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை மற்றும் மதகுருமார், இளைஞர்கள் என்று ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். பெண்களே கூடுதலாகக் காணப்பட்டனர்.

உண்ணாவிரதத்தை நேற்று காலை திரு. பி. சூசைதாசன் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், 'வருங்கால சந்ததியின் விடுதலைக்காக மதகுருமார், விரிவுரையாளர், இளை

[8-ம் பக்கம் பார்க்க]

கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணச் சந்திரச் சந்திக்கு அருகாமையில் கே. கே. எஸ். வீதியில் 136-ம் இலக்கத்தை உடைய உடுப்பி ஹொட்டேல் என அழைக்கப்படும் கடைக் கட்டிடம் காணியான நிலைமையில் விற்பனைக்கு உண்டு.

ஜெ.எஸ். நாதன்,
70, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை.

6070

## சுதந்திரதின விசேட பூசையில் அமைச்சர் 'இராசு'

(கொழும்பு)

நேற்றைய சுதந்திரதினத்தையொட்டி, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர்ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை கலந்து கொண்டார். (இ)

உரும்பராய் சம்பவம்:

## பல ரக துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன?

### சம்பவம் நிகழ்ந்த இடத்தில் 30 வெற்றுத் தோட்டாக்கள்

(மாவிட்டபுரம்)

உரும்பராய் கற்பக விநாயகர் கோவிலடியில் வைத்து நேற்றுமுன்தினமிரவு 1-30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஜிப்பொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் ஜீப்பின் சாரதியும், அதிகாரியும் மயிரிழையில் உயிர் தப்பினர். இந்த ஜீப்பின் இலக்கம் 31ஸ்ரீ 3282 ஆகும்.

போக்குவரத்துசபை உத்தியோகத்தர்கள் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த சமயமே இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இத்துப்பாக்கிப்பிரயோகத்தின்போது 'சப் மெஷின்' துப்பாக்கி, 'றிப்பீற்றட் ஹொட்', துப்பாக்கி, றைபிள்கள், சுழல் துப்பாக்கிகள் ஆகியவை பயன்படுத்தப் பட்டிருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்தனை வகையான துப்பாக்கிகளும் பயன்படுத்தப்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தில் சுதந்திரதின வைபவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 35-வது சுதந்திரதினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மிகவும் அமைதியாகவும், ஆடம்பரமற்ற முறையிலும் நேற்று கொண்டாடப்பட்டது.

காலை 8-25 மணிக்கு அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கொடியை ஏற்றிவைத்தார். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். எம். குலநாயகம், மேலதிக அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட சபையின் செயலாளருமான திரு. பி. எஸ்.பற்றிக் திட்டமிடல் பணிப்பாளரி

(8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


## தேவை

தொகையாக பட்டி வேர் தேவை. நல்ல காய்ந்த வேருக்கு கிலோ 8/-. உடன் பிடுங்கிய வேருக்கு கிலோ 3/- ஆக வாங்கிக்கொள்கிறோம். P. M. நாகரட்ணம் செட்டியார், 15/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 22567. (6088)

## விற்பனைக்கு

சிறந்தரக இலுப்பை அரப்பு விற்பனைக்குண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 6090

பேர்குசன் எஞ்சின் விற்பனைக்குண்டு. நல்லநிலைமையில் உள்ள பேர்குசன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கொள்ளவேண்டிய முகவரி; சிங்கம், காண்டீபன் ஸ்ரோர்ஸ் வாடியடி, பூநகரி. 6092

சித்தன்கேணி சந்தியிலிருந்து 50 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 11பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதி, பகுதியாகவும் பிரித்து விற்கப்படும். தொடர்பு: எஸ். துரைசிங்கம், 'சின்னப்பு இல்லம்', வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. 6084

வீரமாகாளி அம்மன் கோவிலடி - பருத்தித்துறை வீதியில் வீட்டுடன் மூன்றுபரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: C. S. சண்முகலிங்கம் 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6030

ஒருபகுதி மதிகள் அகற்றப்பட்ட 100 பரப்பு செம்மண் தரை பழத்தோட்டம் பலாலி விமான நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் தம்பாலை வீதியில் விற்பனைக்குண்டு. 3 வருட வளர்ச்சியுடைய 100 மா மரங்களும் வேறு பல பழமரங்களும் இரு நன்நீர்க்கிணறுகளும், மூன்று அறைகளைக் கொண்ட வீடும், முழுவளவும் 4 அடி உயரமான மதில் பாதுகாப்பு உண்டு. விபரங்களுக்கு 399, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 6065

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு முன் ஒழுங்கையில் வீடு கட்டவோ அல்லது தோட்டமோ செய்யக்கூடிய 5 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: த. ஸ்ரீபதி, சட்டத்தரணி, 20, பழம்றோட். யாழ்ப்பாணம் 6080

நுணாவில் சந்தியில் பிரதான வீதிக்கு அருகாமையில் வீடு கட்ட உகந்த 7 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; த. மயில்வாகனம், (யாழ்ப்பாணக் கல்லூரி அருகாமை) வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை. 6078

எங்களிடம் சகல விதமான பேப்பர்களும் மலிவு விலையில் உண்டு. வாங்குபவர்களுக்கு 50% கழிவுடன் வெட்டிக் கொடுக்கப்படும். விபுலானந்த அச்சகம், 248/5, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6069

யாழ். பிறவுண் வீதியில் தொழில் நுட்பக்கல்லூரிக்கு அண்மையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: திருச்செல்வம், 91, சம்பியன் லேன், கொக்குவில். 6075

## விற்பனைக்கு

அல்சேஷன் 6 வார பெண் குட்டி விற்பனைக்கு. 263, ஆஸ்பத்திரி வீதி சஞ்சுவான் கோவிலடி], யாழ்ப்பாணம். [6097]

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டமெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில் (The School of Computer Studies) 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

3 மாத எலக்றிக்கல் வயறிங் பயிற்சி 10-02-1983-ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology, 11B, Momsac Building, Stanley Road, Jaffna. 6083


## இடமாற்றம்

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலகத்தில் லிகிதராகக் கடமையாற்றிய திரு கே.தேவதாஸ் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை நெல்லியடி உப அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையிலிருந்து திரு எஸ்.இராமச்சந்திரன் மாற்றம் பெற்றுள்ளார். [அ]

# 5 நாட்களில் வீடுகளை கட்டக்கூடிய தொழிற்சாலை

[யாழ்ப்பாணம்]

மிகக்குறுகிய காலத்தில், அதாவது ஐந்து நாட்களில் வீடுகளைக் கட்டிமுடிக்கக் கூடிய நவீன தொழிற்சாலையொன்று யாழ்ப்பாணத்தில் அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்படவுள்ளது.

யாழ். நகருக்கு மிக அண்மையிலுள்ள சிற்றூரான கொட்டடிப்பதியிலிருக்கும்கற்குளம் என்ற இடத்திலேயே இத்தொழிற்சாலைக்கான வலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நவீன வீடுகள் ஒவ்வொன்றும் 90 சதுரம் மீட்டர்கள் விஸ்தீரணத்தில் அமையும் இருபடுக்கையறைகள் ஒரு வரவேற்பு மண்டபம், ஒரு சாப்பாட்டறை, குளியலறை ஆகியவற்றை இந்த வீடுகள் கொண்டிருக்கும்.

இந்த வீடுகள் முதலில் உலோகப்பொருட்கள் கொண்டுவடிவமைக்கப்படும். பின்னர் சீமெந்து கொண்டு கட்டிமுடிக்கப்படும் விரும்பும் பட்சத்தில் விஸ்தரிக்கக்கூடியவாறும் இதன் நிர்மாணம் இருக்கும்.

சாதாரணமாகஒருவீட்டைக் கட்டுவதைவிட இதன் நிர்மாணச் செலவுகள் மிகக்குறைவாகவே விளங்கும் சுமார் 250 பேருக்கு இதன்மூலம் வேலைவாய்ப்புக்களையும் வழங்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டது.

காலஞ்சென்ற வட்டுத்தொகுதி எம். பி. திரு. அ. திருநாவுக்கரசுவே இத்தகைய வீடுகளை யாழ்ப்பாணத்தில் அமைப்பது குறித்து முன்னர் அதிக ஆர்வங்காட்டினார். எனவே இந்த வீடுகள் 'திரு வீடுகள்' என அழைக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. [கி]


## பிரசித்த ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 180, சேர் பொன். இராமநாதன் வீதி, திருமதி தா. சி. குமாரசாமி, கனகம்மா அவர்களிடம் 20-9-76 தொடக்கம் 8-1-82 வரை அடைவு வைத்துமீட்கப்படாத நகைகள் 5-3-83 காலை 9-00 மணிமுதல் அதே அடைவுகடையில் வைத்து என்னால் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்,
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
6089


## "தென்னாபிரிக்க ஆட்சியில்; நமீபியாவில் சுதந்திர உணர்வுகளுக்கு ஆப்பு!"

### – ஸாம் நிஸோமா

புதுடில்லி பெப். 4.

"நமீபியா, வெடித்துச் சின்னாபின்னமாகச் சிதறும் நிலையில் உள்ளது இப்பயங்கரமான சூழ்நிலையில் இருக்கும் நமீபிய மக்கள் மீது தென்னாபிரிக்க அரசு பொதுத் தேர்தல் என்னும் ஏமாற்றுத் திட்டத்தைத் திணித்து தனது கொடூரமான ஆட்சியைத்தொடர வழிவகுக்கப்பார்க்கின்றது".

நமீபிய மக்கள் விடுதலை அணித்தலைவர் ஸாம்நிஸோமா இவ்வாறு கடந்த வியாழன் இரவு புதுடில்லியில் வைத்துத் தெரிவித்தார்.

திரு ஸாம் நிஸோமா புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியபோது நமீபியாவின் நிலைமைகளைத் தெளிவுபடுத்தினர்.

"தென்னாபிரிக்க ஆட்சியினர் நமீபிய மக்களின்சுதந்திர உணர்வுகளை அழித்துவிடும் ஆப்புகளை வைத்துக்கொடுமைகளை இழைத்துவருகின்றனர். நமீபிய மக்களின் விடுதலையை சுதந்திர உணர்வுகளை அழிப்பது வெறும் பகற்கனவாகவே முடியும் என்றும் அவர் தெரிவித்தார். [உ]

## எழுதுமட்டுவாள் கொள்ளை:

## சந்தேக நபர்கள் மூவருக்கும் தொடர்ந்து றிமாண்ட்

(மட்டுவில்)

எழுதுமட்டுவாளிலுள்ள கடையில் இடம்பெற்ற கொள்ளை சம்பந்தமாகச்சந்தேகத்தின் பேரில் றிமாண்டில் இருந்துவரும் மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டசாவகச்சேரிமாவட்ட நீதிபதி விசாரணையை ஒத்தி வைத்தார்.

1982ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ந் திகதி இரவு அத்துமீறிக் கடைக்குள் புகுந்து 24531 ரூபா பெறுமதியான பவுண் நகைகள், பணம் முதலியன கொள்ளையடிக்கப்பட்டதாக சாவகச்சேரி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்துப் பொலிசார் விக்னேஸ்வரன், தங்கராஜா, சபாரத்தினம் ஆகிய மூவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து, சாவகச்சேரிமாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது, சந்தேக நபர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி சந்தேக நபர்களை மீண்டும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு. மேல் விசாரணையை ஒத்திவைத்தார். (அ)


## பயிலுநர் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பாரிய தொழிற்சாலை ஒன்றுக்கு இயந்திரம்இயக்கும்பயிலுநர் தேவை. தகைமைகள் 28 வயதுக்குட்பட்ட க. பொ. த. (சாதாரண) சித்தியெய்திய ஆண்கள். விண்ணப்பங்கள் செவ்வாய்க்கிழமை (15-2--1983) வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பெட்டி எண்: 6095

மே/பா, ஈழநாடு யாழ்ப்பாணம்.

6095

## சோஷலிஸ தத்துவம்

நாட்டின் பொருளாதாரத்தையும் கலாச்சாரத்தையும் செல்வாக்கையும் வளர்ப்பதற்கு வழிகாட்டுவது சோஷலிஸ தத்துவம். இத்தத்துவத்தைப் பற்றிய அறிவைப்பெற பழம் பெரும் புரட்சிவாதிகளில் ஒருவரான சட்டத்தரணி த. துரைசிங்கம் எழுதிய 'லெனினும் ஆசியாவும்' என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூல் கிடைக்கும் இடம்:

மக்கள் பிரசுராலயம்

46, சிவன்கோவில் வடக்கு றேட், யாழ்ப்பாணம்

மற்றும் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூபா 10/-

சோஷலிஸ ஆய்வுக்கழகம்,
31, விக்சன் வீதி, கொழும்பு-12. (5902)


## தாம்போதி சிரமதான வேலைகள்:

## பொது ஸ்தாபனங்கள் தினமும் பங்குபற்றுகின்றன!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தையும் மன்னார் மாவட்டத்தையும் இணைக்கும் மகாதேவா தாம்போதி சிரமதான வேலைகள் தினமும் துரிதமடைந்து வருகின்றன.

வடபகுதியைச் சேர்ந்த பல பொது ஸ்தாபனங்கள் இந்தத் தாம்போதி சிரமதான வேலைகளில் பங்கெடுத்துவருகின்றன.

இச்சிரமதானப் பணிகளில் கலந்துகொள்வதற்கான அனுமதியையும், உதவிகளையும் பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணன் வழங்கிவருகின்றார்.

சிரமதான வேலைகளில் பங்குகொள்பவர்களின் உணவு வசதிகளுக்கென பூநகரி பரம்பன்கிராய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடவசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிரமதானத்தில் பங்கு கொள்ளும் தொண்டர்கள் உணவு தயாரிப்பதற்கும், பரிமாறுவதற்கும் தேவையான பாத்திர வசதிகளும் தண்ணீர் வசதிகளும் இங்கு செய்யப்பட்டுள்ளன.

பரம்பன்கிராயிலிருந்து கற்களை ஏற்றிக்கொண்டு வந்து மகாதேவா தாம்போதியை நிரவும் பணிகளே இச்சிரமதானத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவற்றை ஏற்றுவதற்கான வாகன வசதிகள் பொறியிலாளரால்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

(வண். நிரு.)


## G. C. E: A/L 83

தூய பிரயோக கணிதம் புதிய பகல்நேர வகுப்பு
(MON. — FRI.)

ஆரம்பம்: 7-2-83

7-00—8-00 A.M. அட்சரகணிதம்

2-30 தொடர்புவேகம்
3-30 திரிகோண கணிதம்

ஆசிரியர்: Ravimohan

மணியம்ஸ் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா — நாகவிகாரை இடையில்) 6086

# "அமெரிக்கா ஆயுதப் போட்டியையே நம்புகின்றது"

மாஸ்கோ, பெப். 4

''புதிய 'மத்திய ராணுவத் தலைமை' (சென்ட்காம்) ஒன்றை உருவாக்க அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது. மத்திய கிழக்கு, மற்றும் தூரகிழக்கைச் சேர்ந்த 19 நாடுகளும், இந்து மா கடலின் பெரும் பகுதியும் இதன்கீழ் அடங்கும். அமெரிக்காவின் கரைகளிலிருந்து அதி தொலைவிலுள்ள உலகின் பெரும் பகுதிக்கு, அமெரிக்க ராணுவ – அரசியல் திட்டம் விஸ்தரிக்கப்படுகிறது என்பதே இதன் பொருளாகும்''.

இவ்வாறு சோவியத் 'பிராவ்தா' கூறுகிறது. இது பற்றி மேலும் 'பிராவ்தா' தெரிவித்துள்ளதாவது:-

''சோவியத்யூனியன் தெற்கு எல்லைக்கு அருகில், மூன்று கண்டங்கள் சந்திக்கும் இடத்தில், 'சென்ட்காமின்' நடவடிக்கைகள் நிகழும் என்பதும், இந்த இடத்தில் ஒரு ராணுவத் தளத்தை ஏற்படுத்துவதே அமெரிக்க ராணுவத் துறையின் நீண்டகால விருப்பமாகும்.

''சென்ட்காமின் நடவடிக்கை மண்டலம் என்று பிரகடனம் செய்யப்பெற்றுள்ள 19 நாடுகளில் எந்தவொரு நாடும் தலையீட்டுப் படை ஒன்றை உருவாக்குமாறோ, அமெரிக்க ராணுவ நடமாட்டம் அப்பகுதியில் தேவை என்றோ அதிகாரபூர்வமாக அமெரிக்காவிடம்கோரவில்லை.

'மத்திய ராணுவத் தலைமை'யை உருவாக்குதென்ற அமெரிக்காவின் தீர்மானம் ஆயுதப் போட்டியைத்தான் அமெரிக்க அரசு நம்பியுள்ளது என்பதற்குச் சான்றாகும்.

''அரசியல் வழிகள் மூலம் இன்றைய உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண லாம், சமாதானத்தையும் மக்களின் பந்தோபஸ்தையும் வலுப்படுத்திப் பூசல்களுக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்னும், சோவியத் யூனியனின் கோரிக்கைக்கு மாறான பாதையிலே அமெரிக்க அரசு செல்கின்றது''.

## அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் பொதுத்தேர்தல்

சிட்னி, பெப். 4

அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் 5ம் திகதி பொதுத்தேர்தல் நடாத்தப்படவிருப்பதாக அந்நாட்டுப் பிரதமர் திரு. பிரேசர் இன்று அறிவித்துள்ளார். ஆட்சியிலிருக்கும் லிபரல் கட்சியின் பதவிக்காலம் வரும் அக்டோபரிலேயே முடிவடைகிற போதிலும், எதிர்க்கட்சியான தொழிற் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சீர்குலைவைக் கருத்திற்கொண்டு முன்னதாக பொதுத்தேர்தலுக்கு அரசு திகதியை அறிவித்திருக்கிறது.

## அசாமில் 7 பேர் கொலை

புதுடில்லி, பெப். 3

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் வன்செயல்கள் வெடித்திருப்பதால், இங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நான்கு பாலங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இருபத்து நான்கு மணிநேரத்துக்குள் 7 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## கானா மக்கள் தாயகம் திரும்பினர்

லண்டன், பெப். 4

நைஜீரியாவில் சட்டவிரோதமாகக் குடியேறிய இரண்டரை லட்சம் கானாநாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் நைஜீரியாவைவிட்டு மீண்டும் தமது தாயகத்துக்கு கால்நடையாகச் சென்றடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாக நைஜீரியாவில் குடியேறிய கானா நாட்டுக் கிறிஸ்தவர்கள் தாயகத்திற்கு வருவதற்கு வசதியாக கானா அரசு தனது நாட்டு எல்லைத் தடைகளைத் திறந்துவைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## "அணிசேரா மாநாடு ஆக்கப்பணிக்குவழிவகுக்கும்
### - நேபாளப்பிரதமர்

புதுடில்லி, பெப். 4

புதியதோர் பொருளாதார அமைப்பு முறையினை உருவாக்குவதிலும், மண்டலசார்பற்ற நாடுகளுக்கு இடையே கருத்து மோதல்களுக்கு இடமின்றி ஒத்துழைப்புகளை, பரஸ்பர உறவுகளை வளர்ப்பதிலும்மண்டலசார்பற்ற 7வது உச்சிமகாநாடு ஆக்கபூர்வமாகபணியாற்றும் நம்பிக்கை பாரதத்திற்கும் நேபாளத்திற்கும் உறுதியாக உண்டு.''

நேபாளப் பிரதமருக்கு பிரதமர் இந்திராகாந்தி நேற்று இரவு அளித்த வரவேற்பு விருந்து வைபவத்தில் மேற்கண்டவாறு நேபாளப் பிரதமர் கூறினர்,

''பாரதமும், நேபாளமும் தங்கள் நீர்வளங்களைத் தக்க முறையில் பயன்படுத்தி நல்வாழ்வுத்திட்டங்களை ஏற்படுத்தவேண்டும். நீர்வளப்பயன்பாடு பற்றி இருநாடுகளும் ஒருங்கிணைந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி ஒத்துழைப்பை வளர்க்க வேண்டும்'' என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

[உ]

## கிராம மட்டத்தில் அறவழிச் சமுதாய மாறுதல் பயிற்சி

ஹைதராபாத், பெப். 4

காந்திய சமாதானக் கொள்கைகளை, கருத்துக்களை கிராமிய மட்டத்தில் நிலைபெறச் செய்து, அறவழி நீதிச் சமுதாய மாறுதல் பயிற்சிகளைக் கிராமிய மக்களுக்கு அளிக்கவும், அதன்மூலம் சமுதாயத்தில் நிலவும் வறுமை, வன்செயல்களை ஒழிக்கவும் 'அனைத்துத் தேசிய சமுதாய மாறுதல் கேந்திரம்' என்னும் அமைப்பு கர்நாடக மாநிலத்திலுள்ள டார்வாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்புப்பற்றிய மகாநாட்டை 'அமெரிக்க சமுதாய மாறுதல்' தலைமையகத்தின் இயக்குநர் கலாநிதி ஜோர்ஜ் விலோபி ஆரம்பித்து வைத்தார். இந்தியாவின் 22 மாநிலங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளும், இலங்கை, அவுஸ்திரேலியா நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

மகாநாட்டில் பங்களூரிலும் பெங்களூரிலும் 'அனைத்துத் தேசிய சமுதாய மாறுதல் கேந்திரம்'களை நிறுவிச் செயல் திட்டங்களை ஆரம்பிப்பதெனவும், இதற்கான 10 பேர்கொண்ட ஆலோசனைச் சபையும் நிறுவப்பட்டுள்ளது. இதில் இலங்கை அறவழிப் போராட்டக் குழுவினைச் சேர்ந்த ஜீவகதாஸ் இடம்பெற்றுள்ளார்.

[உ]

## ஜெயலலிதாவுக்கு வாழ்த்து

[யாழ்ப்பாணம்]

முதலமைச்சர் எம். ஜி ஆரின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பிரசாரச்செயலாளராக செல்வி ஜெயலலிதா நியமிக்கப்பட்டிருப்பதை வாழ்த்தி, அவருக்கு அகில இலங்கை அ. தி. மு. க. அமைப்புச்செயலாளர் பொன், மதிமுகராசா செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## சென்னை, மதுரையில்: அறிஞர் அண்ணாவின் நினைவு தின ஊர்வலங்கள்

சென்னை, பெப்.4

அறிஞர் அண்ணாதுரையின் 14வதுநினைவுதினமான நேற்று வியாழக்கிழமை சென்னையிலும், மதுரையிலும் தி. மு. க.வினரும், ஆளும் அ. தி. மு. க.வினரும் தனித் தனியான மௌன ஊர்வலங்களை நடத்தினார்கள்.

அமரர் அறிஞர் அண்ணாதுரையின் நினைவு தினத்தை ஒட்டி தி. மு. க. வின் தலைவர் கலைஞர் மு கருணாநிதி, லோக்சபா சபாநாயகர் லட்சுமணன் உட்பட பலர் கலந்துகொண்ட மௌன ஊர்வலம் ஒன்றினை சென்னை அண்ணாசாலையிலிருந்து ஆரம்பித்து அண்ணாவின் சமாதிவரை நடத்தப்பட்டது. மதுரையில் தி. மு. க. வின் அண்ணாவின் நினைவுதின ஊர்வலத்திற்குத் தென்னரசு தலைமை தாங்கினார். தி மு க. தலைவர், தொண்டர்கள், பொதுமக்கள் மௌன ஊர்வலத்தின் இறுதியில் அண்ணா சமாதியில் மலர் வளையங்களையும், மலர்களையும் வைத்துத் தமது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

அ. தி. மு. க.வும் அண்ணா சாலையிலிருந்து அண்ணாவின் சமாதிவரை மௌன ஊர்வலத்தை நடத்தினார்கள். இதில் முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன், நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உட்பட தமிழக மாநில அமைச்சர்கள் பலரும், அ. தி. மு. வின் முக்கியஸ்தர்களும், உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். ஊர்வலம் அண்ணா சமாதியை அடைந்ததும் மலர் வளையங்கள், மலர் கொத்துக்கள் மலர்களைச் சமாதியில்வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அ. தி. மு. க.வின் 17 அம்ச உறுதிமொழிகளை விளக்கம் செய்தார். இதனையடுத்து தமிழக மாநில முதலமைச்சர் உட்பட, ஏனைய அமைச்சர்களும், உறுப்பினர்களும் அண்ணா சமாதியில் மேற்படி 17 அம்ச உறுதிமொழி செய்தனர்.

அ. தி. மு கவினரால் மதுரையில் நடத்தப்பட்ட அண்ணா நினைவுதின ஊர்வலத்திற்கு அ. தி. மு. க.வின் பொதுச்செயலாளர் மாதவன் தலைமைவகித்தார்.

(உ)

## "ஏழைகளுக்கு பணிபுரிய என்னை அர்பணித்துள்ளேன்"
### - பிரதமர் இந்திரா

புதுடில்லி, பெப். 4

''பாரதம் ஸ்திரமான நாடாக உருவாகி வருவதை விரும்பாத சில உலக நாடுகள் உள்நாட்டுச் சுயநலக்குழுக்கள் மூலம் பாரதத்தில் ஊடுருவலை மேற்கொண்டுள்ளன. இதன் மூலம் தேசிய நலனையும், பாதுகாப்பையும் சீர்குலைத்துவிட இந்த நாடுகள் திட்டமிட்டுள்ளன'' என்று பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி புதுடில்லியில்நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்,

மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பிராந்திய ரீதியான சுதந்திரக் கோரிக்கை பாரதத்தின் தேசியப்பாதுகாப்புக்கும், தேசிய அமைதிக்கும் விடுக்கப்பட்டுள்ள பேராபத்தான சவாலாகும். வறுமையை ஒழிப்பதன் மூலமே மாநிலத்தனித்துவம் போன்ற மக்களைத் திசைதிருப்பும் குறுகிய கொள்கைகளை அகற்றி மக்களுக்கு உண்மையான நலனைச் செய்துவைக்க முடியும். எனது வாழ்க்கையையும், நலன்களையும் பாரதநாட்டின் ஏழைமக்களின் நல்வாழ்வுக்காக முழுமையாக அர்ப்பணித்துப்பணிபுரிந்து வருகின்றேன். இதுவே எனது ஒரே குறிக்கோளாகவும் உள்ளது'' என்றும் அவர் தெரிவித்தார்.

[உ]

## தடுப்புக்காவலில்: இராணுவ தளபதி தற்கொலை

லண்டன், பெப். 4

தென்னமெரிக்காவிலுள்ள முன்னையடச்சுக் குடியேற்ற நாடான சூரிநாமா அரசினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சூரினாமாவின் முன்னை இராணுவத்தளபதி மேஜயர் ஹோக தடுப்புக்காவலில் தூக்குப்போட்டுத் தற்கொலைசெய்துள்ளார்.

அரசவிரோத நடவடிக்கைக் குற்றத்திற்காக இராணுவப் படைத்தளபதியான மேஜர் ஹோக் உட்பட 21 பேரை சூரிநாமா அரசு கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்தது. இதில் பத்துபேரை அண்மையில் விடுதலை செய்துவிட்டது. தற்போது மேஜர் ஹோக் தற்கொலைசெய்துள்ளதை அடுத்து 10 பேர் தடுடபுக்காவலில் உள்ளனர்.

உ]

## திருச்செந்தூர் தேர்தலில் பன்முகப்போட்டி!

சென்னை, பெப். 4

திருச்செந்தூர் இடைத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக இந்திராகாங்கிரஸின் திருச்செந்தூர் தொகுதி அமைப்பாளரும் வழக்கறிஞருமான எஸ். கே. சந்திரசேகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக திரு. முத்து தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அ. தி. மு. கவின் வேட்பாளராக முன்னைநாள் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் திரு. அமிர்தராஜ் தெரிவுபெற்றுள்ளார் என தமிழ் நாடு மாநில நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலைவரை திருச்செந்தூர் இடைத்தேர்தலுக்கான வேட்பாளர் மனுக்களை 20 பேர் தாக்கல் செய்துள்ளனர் வேட்பாளரின் வேட்புமனுத்தாக்கல் செய்யும் இறுதித்தினம் நேற்று ஆகும்.

## துணுக்காயில் பால் உற்பத்தி சங்கம் அங்குரார்ப்பணம்

(துணுக்காய்)

துணுக்காய்ப்பகுதி கால்நடைவளர்ப்போரின் நீண்ட நாட்கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டும் மாங்குளத்தில் அமைய இருக்கும் பால்சேகரிக்கும் நிலையத்துக்கு பால் வழங்கும் நோக்கமாகவும் பாலுற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் உதவிஅரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரா, முல்லைத்தீவு மாவட்டகூட்டுறவு கல்வி விஸ்தரிப்பு அதிகாரி திரு. ரீ. சபாரத்தினம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ந. சிவஞானசுந்தரராசா துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்க தலைவர் திரு சு. மா. பூபாலசிங்கம், துணுக்காய் பகுதி அரசாங்க மிருகவைத்தியர் திரு. க. சிவயோகநாதன் ஆகியோர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் கால்நடைவளர்ப்போரின் நலன் கருதி இச்சங்கம் உருவாக்கப்பட்டது.

துணுக்காய்உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இந்த அங்குரார்ப்பண கூட்டம் நடைபெற்றது.

[ஈ]

## பூரண ஹர்த்தால்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம்பூரண ஹர்த்தால்அனுஷ்டிக்கப்பட்டதுஇங்குள்ள சந்தைப்பகுதி நேற்று வெறிச்சோடிக்கிடந்தது.

இப்பகுதி பாடசாலைகளுக்கு மாணவர்கள் எவருமே வரவில்லை. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி ஆகிய பிரதான பாடசாலைகளுக்கு மாணவர்கள் எவருமே சமுகமளிக்கவில்லை

மாதகல் பகுதியில் யாழ்ப்பாணப்பகுதிக்கு சேவையிலீடுபடும் மினி பஸ்கள் எட்டுக்கு மேலானவை மாதகல் பகுதியில் நின்றுகொண்டிருந்தன,

சங்கானைப்பகுதியில் சந்தை இயங்கவில்லை. கடைகள் சில ஒற்றைக்கதவில் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

### மணிவாக்கு

ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே

— திருமந்திரம்

# நமது நோக்கு

## சமய சமரசம்

நான்கு பெரும் மதங்கள் வாழும் இந்நாட்டில் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஆன்மீக அடிப்படையில் பொது நோக்கு வேண்டுமென்று மதத் தலைவர்கள் இச்சுப தினத்தில் பிரார்த்திக்கின்றனர்.

இலங்கையின் சுதந்திர வாழ்வுக்கு சமய சமரசம் எவ்வளவு அவசியமோ, இன்று மதச் சார்பற்ற வாழ்வை மேம்படுத்தி வாழும் பல நாடுகளுக்கும், நாகரிகங்களுக்கு அவ்வளவு அவசியம்.

மதச்சார்பற்ற வாழ்வை நாடவேண்டிய அவசியம், இன்று உலகின் பல நாடுகளில் செல்வாக்குப் பெற்று வரும் பொதுவுடைமைக் கொள்கையே என்பது பெருமளவிற்கு உண்மை; ஆனால் மதத்தில் அவநம்பிக்கை வளர ஏதுவானது மதங்களிடையே வளர்ந்து வந்த பூசலும் போரும்!

மக்கள் வாழ்வை வளம் பெற வந்ததே மதம், கோயில், சேர்ச், மசூதி, விஹாரை முதலிய அமைப்புக்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படலாம். உள்ளே இருக்கின்ற மூர்த்தி வெவ்வேறாயிருக்கலாம். ஆனால் அநுக்கிரகம் செய்கிற தெய்வம் ஒன்றே என்பதை உணர்த்திய சமரச ஞானி தாயுமானவர். இன்று அவருடைய இரண்டாவது நூற்றாண்டு தினம்; தை விசாகம் எல்லாச் சமயத்தவர்களுக்கும் ஒரு புனித தினமாவதற்குப் போதிய ஆதாரம் உண்டு.

வேறுபடு சமயமெல்லாம்
புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே
நின்விளையாட்டலால்
மாறுபடும் கருத்தில்லை!
முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்
போல்வயங்கிற்றம்மா!

என்று பாடிய சமயச் சான்றோர் தாயுமானவரை உலகில் பல்வேறு சமயத்தவர்களும், இனத்தவர்களும் அறியும் வண்ணம் இந்நாட்டின் சைவப் பெருந்தலைவரான சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களும் கிறீஸ்தவ மதத் தலைவரும் சட்ட நிபுணருமான டாக்டர் ஐசாக் தம்பையா அவர்களும தாயுமான சுவாமிகளின் பாடல்களை மொழிபெயர்த்துள்ளனர்.

சுவாமிகளின் சமரசக் கொள்கையைத் தீர்ப்பிரயோகஞ்செய்து "எம்மதமும் சம்மதம்" என்ற ஒரு போலிப் பிரசாரத்தை நடத்திவரும் கூட்டத்தினரை நாம் இன்று காண்பது வியப்பல்ல.

பிறப்பிலே தாம் தழுவிக்கொண்ட மதத்தின் மகத்துவத்தை அறியாதவர்கள், சமரசம் பேசும் திறமையோ உரிமையோ உடையவர்களல்லர்

அரசியல் காரணங்களுக்காக, மக்கள் ஆதரவைத் தேடும் நோக்கோடு சமயத்துக்கேற்ற சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் போலிகளுக்கு தாயுமானவரின் உயர்ந்த லட்சியம் புரியமுடியாத பொருளே.

"இது ஒன்றே முத்தியடைய வழிகாட்டும் மார்க்கம்" என்று கொள்ளும் சமயங்களும் உண்டு. இவற்றிற்கு சமரசஞானம் புறக்குடத்துத் தண்ணீர்!

இவை மதமாற்றத்தில் ஈடுபடுவது ஒரு நூதனமான செய்தியல்ல: சரித்திர ரீதியில் உலகில் பல பாகங்களிலும் நிர்ப்பந்த மதமாற்றம் பெருமளவில் நிகழ்ந்ததும், சமயப் பூசல்களால் பெரும் போர்கள் கிளம்பியதும் வரலாற்றின் கறைபட்ட அத்தியாயங்கள்.

இந்த நிலை இன்று வீறு குறைந்திருந்தபோதும், முற்றாக ஒழிந்து போகவில்லை.

மற்ற மதங்களுக்கும் இந்து மதத்துக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசம், இந்து மதம் "இது ஒன்றே மோட்ச மார்க்கம்" என்று சொல்லாமலிருக்கிறது. எனவே பிறரைத் தன்மதத்துக்கு மாற்றுவது என்பது இடையாது.

இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவனும் இந்த விசால மனப்பான்மையைக் குறித்துப் பெருமைப் படவேண்டும். கீதையில் பகவான் "எவன் எந்த விதத்தில், எந்த ரூபத்தில் வழிபட்டாலும், அவனுடைய சிரத்தையை நானே விருத்தியாக்கி அவனை அதே வழிபாட்டில் நிலைப்படுத்துகிறேன் என்கிறார்.

ஆழ்வார் "அவரவர் தமதமதறிவறி வகை வகை அவரவர் இறையவர்" என்கிறார். இதனால்தான் மற்ற மதங்களில் செய்வதுபோல் மதமாற்றம்செய்வது அதற்காகத் தண்டிப்பது தங்கள் மதத்துக்கு மற்றவரைத் திருப்புவது முதலானகுறைகள் இந்து மதத்தில்—சைவ சமய வாழ்வில் என்றுமே நடந்ததில்லை.

மதங்களுக்கிடையே கிரியைகள் அனுட்டானங்கள் வேறுபடலாம்; எல்லா மதங்களையும் ஒரேமாதிரி ஆக்கவேண்டிய அவசியமில்லை.

எல்லா மதத்தினரும் மனத்தில் ஒற்றுமையோடு இருப்பதுதான் அவசியம். இந்த நன்னாளில் இதனை வற்புறுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

# திருமூலர் மரபில் வந்த தாயுமானவசுவாமிகள்

5-2-83 ஆகிய இன்று தாயுமானவர் குருபூசை இவ்வாண்டைத் தாயுமானவர் இருநூறாவது ஆண்டாகக் கொண்டு அன்னாரின் சிந்தனைகளையும் பாடல்களையும் நினைவு கூறும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று
அறியேன் பராபரமே"

இத்திருப்பாடலை நாடோறும் கேட்கின்றோம், ஓதுகின்றோம். உள்ளத்தில் இருத்துகின்றோம். அதுபோலவே

"அன்பர்பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே
வந்தெய்தும் பராபரமே"

என்பதும் அடிக்கடி எங்கள் காதில் ஒலிக்கின்றது. இத்திருப்பாடல்கள் பொதுமக்கள் யாவர்க்கும் பேருவகை ஊட்டுகின்ற எளிய இனிய திருப்பாடல்கள்.

இவற்றை அருளியவர் தாயுமானவ சுவாமிகள் அவர்முத்திபேறு நிலை பெற்ற திருநாள் தைமாத விசாக நட்சேத்திர நாள் அவர் வாழ்ந்த காலம் 200 ஆண்டுக்கு முன் எனவும் 300 ஆண்டுக்கு முன்எனவும் பல படக்கூறுவர். ஆனால் அடிகளார் பிற்காலத்து வாழ்ந்த மாபெருஞ்ஞானி என்பதிற் சந்தேகமில்லை.

ஞானிகள் காலங்கடந்தவர்கள், தேசங்கடந்தவர்கள், இன, மொழி ஏன், சமயமும் கடந்தவர்கள்! தாயுமானவர் "சைவசமயமே சமயம்" எனும் கொள்கையுடன் சமயங்கடந்த சமயாதீத சமரச விஞ்ஞானியாயும் விளங்கினார். அதனால் அவர் பாடல்கள் சைவசமயிகட்கும், பிற சமயிகட்கும் ஒப்பற்ற ஞானக்களஞ்சியமாக விளங்குகின்றன.

தாயுமானவர் பெற்ற ஞானம் திருக்கைலாச பரம்பரையிலிருந்து தோன்றியவர் திருமூலதேவநாயனார். திருமூலரின் மரபில்வந்தவரே தாயுமானவர் திருமந்திரம் சகல வேத ஆகம விளக்கம். எனலாம். திருமந்திரம் வேதாந்த சித்தாந்த சமரச நன்னூல் 'ஒன்றேகுலம்! ஒருவனே தேவன்!' என்பதும்கூட திருமந்திரமே. திருமூலர் வழிவந்த மௌன குருவிடம் 'சும்மா இரு' என்னும் மந்திர உபதேசம் பெற்றவரே தாயுமானவர். இதிலிருந்து தாயுமானார் எத்தகைய சிறந்த பழைமையுடைய ஞானபரம்பரையின் நல்வாரிசு என்பதை அறியலாம்.

பாரதியார் உள்ளிட்ட கவிஞர்களும் யோகசுவாமிகள் போன்ற ஞானிகளும், தாயுமானவரைப் பொன்னேபோற் போற்றியுள்ளனர்.

ஈழம் வாழ் ஞானிகளும், நல்லறிஞர்களும், பிறரும் தாயுமானவர் பாடல்களில் ஈடுபாடுகொண்டு விளங்கியமையைக் காணலாம். ஆங்கிலமொழிப் புலமையும் சட்ட நூலறிவு வன்மையுமிக்கவர். ஐசத்தப்பையா என்னும் பெரியார் அன்னார் தாயுமானவரிலே ஈடுபாடு கொண்டு அரியதோர் ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் ஆக்கியளித்துள்ளார். அன்னார் செயல் ஈழத்தின் பெருமை தருவதாக உள்ளது.


'எம் தெய்வம் பெரிது! எம் சமயம் பெரிது! எம் இனம் பெரிது! எம் மொழி பெரிது!' என்னும் உணர்வுநிலை, பிறர் தெய்வம், சமயம், இனம், மொழி, தேசம் முதலியவற்றை இழிவாகக் கருதிப் போர்புரியத் தூண்டுவதாக இருத்தலாகாது. சமயமும் வேண்டும்; சமரசமும் வேண்டும். இவற்றை அளிக்கவல்ல தாயுமானவரின் திருப்பாடல்களிலே நம்மவர் ஈடுபட்டால் நற்பேறுகள் பல விளையும். இன்பநிலை தானே வந்து எய்தும்.

தாயுமானவர் பாடல்களில் வரும் நிலையாமை பற்றிய கருத்துக்கள் திருக்குறள், திரு

(5-ம் பக்கம் பார்க்க)

க. கணபதிப்பிள்ளை
(சிவ-பிரகாசநிலையம் யாழ்ப்பாணம்)

# மக்கள் சேவைக்கென வாழ்ந்தவர் அமரர் ஏ. எல். தம்பிஐயா



"கொள்கைகளும் இயக்கங்களும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களின் நன்மைக்காகவும் தோன்றியவை. ஆகவே கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களை விட நாட்டு மக்களின் நன்மையே பெரிது என்று உணர்' சுவாமி விவேகானந்தாவின் இக்கூற்றுக்கு அமைவாகக் கட்சி வேறுபாடுகளின்றி பொதுவான நன்மைகளையும், சேவைகளையும் இலட்சியமாகக்கொண்டு தான் பிறந்த மண்ணின் உயர்வுக்கும் மக்களின் வளமான வாழ்வுக்குமாக இறுதிவரை வாழ்ந்து மறைந்தவர் தீவுப்பகுதி தந்த பெருமகன் அமரர் ஏ. எல். தம்பிஐயா அவர்கள். 1903ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் திகதி கரம்பனில் பிறந்த அவர் இலங்கையில் தமது கல்லூரிப்படிப்புகளை முடித்துக்கொண்டு லண்டனில் சட்ட மாணவனுகப் பயின்ற காலத்தில் உதைபந்தாட்டத்தின்போது காலில் ஏற்பட்ட வருத்தத்தின் நிமித்தம் தமது படிப்பைத்தொடர முடியாத நிலையில் மீண்டும் தாயகம் திரும்பி வர்த்தகத் துறையில் ஈடுபட்டு மேல்நிலை அடைந்தார்.

(இரு தடவைகள் தீவுப்பகுதியின் பிரதிநிதியாக விளங்கிய அமரர் திரு. ஏ. எல். தம்பிஐயா அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும் மக்களுக்காற்றிய சேவைகளை யொட்டி தீவுப்பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் அன்னாரின் மறைவு குறித்து இன்று நடைபெறும் அஞ்சலிக் கூட்டங்களை யொட்டி அவரின் சேவைகளை நினைவு கூரும் வகையில் இக் கட்டுரை இடம் பெறுகிறது)

மக்களுக்கு தம்மால் இயன்றவரை தொண்டாற்ற வேண்டுமென்ற சிந்தனையுடன் வாழ்ந்த அவரின் எண்ணம் 1946ல் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு அரசியலுடன் தொடர்புபடுத்தப்பட்டதால் மேலும் வலுப்பெற்றது. முதல் தடவையாக தீவுப்பகுதிப் பிரதிநிதியாக அவர் பதவி ஏற்றுக்கொண்டதும் தனது தொகுதியிலுள்ள அனைத்து மக்களையும் சந்தித்து குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டார். அக்காலத்தில் தீவுப்பகுதி மக்கள் பிரதான நகருக்கு செல்வதற்காக சிறிய பெரிய கடல்களைக் கடக்கவேண்டியதாக இருந்தது. இவற்றை நீக்கி துரித போக்குவரத்துக்களை ஏற்படுத்தப் பிரதான நகருடனுன இணைப்புப் பாலங்கள் அவசியம் என்பதை உணர்ந்து செயற்பட்டதாலேயே ஊர்காவற்றுறை—காரைநகர்-பண்ணை வேலணை, வேலணை — புங்குடு தீவுப் பாலாக உருவாக வழிபிறந்தது குறிப்பிடத் தக்கது. இதுதவிர கடல்நீர் உட்புகுந்து மண்வளங்கள் பாதிப்படையவதைத் தடுக்கும் நடவடிக்கையில் அவரது காலத்தில் தீவுப்பகுதியில் சுமார் 500ஏக்கர்கள் வரை பாதுகாக்கப்பட்டுள்ளது வேலணையில் மகாவித்தியாலயமும் தரபகுதிகளில்உதவிப் பாடசாலைகளும் உருவாக்கப்பட்டுக் கல்வித்தரம் உயர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நெடுந்தீவைப் பொறுத்தவரை திரு. தம்பையாவின் பதவிக்காலம் ஒருபுதிய சகாப்தத்தின் ஆரம்பம்என்பதுமறுப்பதற்கில்லை. நெடுந்தீவின் முதலாவது கிராமசபைத்தலைவரும் தனது நெருங்கிய

(5-ம் பக்கம் பார்க்க)

- நெடுந்தீவு லக்ஸ்மன்-

## பாடசாலை அனுமதி: தளபாடங்களுக்கு நிதி சேகரிப்பதாக புகார்!

(பண்டத்தரிப்பு)

இவ்வருட பாடசாலைகளின் புதிய தவணை கடந்த மாதம் 17-ம் திகதி அரம்பமானதைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் பலத்த தளபாடத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களிடம் தளபாடங்கள் வாங்குவதற்காக அன்பளிப்பாகப் பணம் செலுத்துமாறு சில பாடசாலை நிர்வாகங்கள் பெற்றோரிடம் வற்புறுத்திவருவதாகவும் கூறப்படுகின்றது.

தமது பிள்ளையை இப்பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றுக்கு முதலாம் வகுப்பில் அனுமதிப்பதற்காகப் பெற்றோர் ஒருவர் கொண்டு சென்றபோது பாடசாலை நிர்வாகம் பிள்ளையைச் சேர்க்க வேண்டுமாயின் தளபாடம் வாங்குவதற்கான நிதிக்கு 150 ரூபா செலுத்த வேண்டும் என்று நிபந்தனை போடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிள்ளைகளுக்கு இருந்து படிக்கத் தளபாடங்கள் எதுவும் இல்லை. கல்வித்திணைக்களமும தளபாடங்களைத் தருவதாக இல்லை. இதனு

(7-ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி கொள்ளை கொலை வழக்கு:

# “நடேசுதாசனை தலைகீழாகக் கட்டித் தூக்கவுமில்லை; தாக்கவுமில்லை”

### ஏ. எஸ். பி. ஹேமச்சந்திரா சாட்சியம்

(இ. கந்தசாமி)

“நடேசுதாசனிடம் இருந்து வாக்குமூலத்தைப் பெறுவதற்காக நாம் அவரைத் தலைகீழாகக் கட்டித் தூக்கவுமில்லை; அவரைத் தாக்கவுமில்லை” என்று நீர்வேலி வங்கிக் கொள்ளை கொலை வழக்கின் ‘இடை’ விசாரணையில் சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் அதிபர் ஏ. கே. ஹேமச்சந்திரா கூறினார்.

அவ்வழக்கு கொழும்புமேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

ஏ. எஸ். பி. ஹேமச்சந்திரா தொடர்ந்து சாட்சியமளித்த போது கூறியதாவது:

நடேசுதாசனையோ வேறு எவரையுமோ நான் தாக்கியது கிடையாது. வேறு பொலிஸ் அதிகாரிகளையோ வேறு எவருமோ அவர்களைத் தாக்கவும் இல்லை. நடேசுதாசனோ ஏனைய எதிரிகளோ எந்தவித சித்திரவதைகளுக்குமோ இன்னல்களுக்குமோ உள்ளாக்கப்படவில்லை. வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமுன் விசாரணை தொடர்பான கேள்விகளைக் கேட்டேன். அவர் தன்னிச்சையாகவே பதிலளித்தார்.

நான் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டேன். அவர் அதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. ஜி. சி. ஈ. சாதாரண தரத்தில் அவர் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

“வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டதும் அதனை வாசித்து விளங்கிக்கொண்டு அதன் அடியில் தமது கையொப்பமிட்டார். திருத்தங்கள் செய்யப்பட்ட இடத்தில் சிறு கையொப்பம் இட்டார்.

சுனில்; இந்த வழக்கில் இன்பம் என்பவர் பற்றி கூறப்பட்டது. அவர்பற்றித் தெரியுமா?

சாட்;- தெரியும்.

சுனில்;- அது அவரது இயற் பெயரா?

சாட்:- அவரது சரியான பெயர் விஸ்வசோதி இரத்தினம் அல்லது இன்பம்.

சுனில்:- செல்வம் என்பவரைத் தெரியுமா?

சாட்;- அவர் விஸ்வசோதி இரத்தினத்தின் மைத்துனர்.

சுனில்:- இன்பத்தின் மீது ஏதாவது நீதிமன்றத்தில் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தனவா?

சாட்;- யாம். முன்னை மேயர் அல்பிரட் துரையப்பா கொலை தொடர்பாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அந்த வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

சுனில்;- அந்த வழக்கு ஜூரர் இல்லாத நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டதா? ஜூரர் உள்ள நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டதா?

சாட்:- ஜூரர் உள்ள நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது.

அடுத்து சாட்சியை எதிரி தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி சத்தியேந்திரா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சத்:- பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் படித்துப் பார்த்ததாகக் கூறினீர்கள்?

சாட்:- ஆம் அந்தச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியபின் படித்துப் பார்த்தேன்.

சத்: 79ம் ஆண்டு ஜூலை மாதம் அந்தச் சட்டம் நிறைவேறிய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது தெரியுமா?

சா: ஆம்.

சத்: அத்துடன் 79 ஜூலையில் 6 மாதங்களுக்குள் வடக்கில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் உத்தரவும் இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தது தெரியுமா?

சா: இராணுவத்திற்கு குறிப்பாக வழங்கப்பட்ட உத்தரவுபற்றி எனக்குத்தெரியாது ஆனால் பயங்கரவாதிகளை இராணுவத்தினர் தேடிவந்தனர்.

சத்: 79 ஜூலை மாதத்தில் யாழ், பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இன்பத்தினதும் செல்வத்தினதும் சிதைக்கப்பட்ட சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது என்பது சரியா?

சா: யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகில் அல்ல. இன்பம்செல்வம் ஆகியோரின் சடலம் இருந்த நிலைபற்றித்தெரியாது. அவர்களையாரோகொலை செய்திருக்கிறார்கள் என கேள்விப்பட்டேன்.

சத்: பயங்கரவாத தடைச் சட்டத்தின் 16ம் பிரிவின் சரத்துக்களைப் படித்துப்புரிந்து கொண்டீர்களா?

சா: ஆம்.

சத்: அந்தப் பிரிவின்படி உபபொலிஸ் அத்தியட்சகருக்கு கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வாக்கு மூலம் சுயவிருப்பத்தின்படி அளிக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு இங்கு எதிரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரியுமா?

சா: ஆம்.

சத்: சந்தேகநபர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டவேளையில் இரகசியமாக செய்யப்பட்டவற்றை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிப்பது கஷ்டம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

சா: என்றால் அதுபற்றி எதுவும் கூறமுடியாது.

சத்: இவ்வாறு எதனைக் கருத்தும் கூறமுடியாது என்று தெரிவிக்கும் உமது பதில் சந்தேக நபர்களுக்கு அதனை நிரூபிக்கமுடியாது என்பதை நீதிமன்றத்தில் தெரிவிக்கவிருப்பமில்லை என்பதை குறிக்கின்றதா?

சா: விபரங்களை நீதிமன்றத்தில் எடுத்துக்கூறுவதில் விருப்பம் இல்லை என்றுஎதுவும் கிடையாது இது அபிப்பிராயம் கூறும் விடயம்,

சத்: நீங்கள் இப்படி காவலில் இருக்கும் சந்தேக நபர்கள் மீது இரகசியமாக நடத்திய காரியங்களை நிரூபிப்பது சந்தேக நபர்களுக்கு கஷ்டமாக இருக்கும் என்பதை நீர் அறிந்திருந்தமையினால் தான் ஆனையிறவு முகாமில் நீரும் உமது சக உத்தியோகத்தர்களும் வாக்குமூலம் பெறுவதற்காக சந்தேகநபர்கள் மீது கடும் சித்திரவதை துன்புறுத்தல், தாக்குதல்களை நடத்தினீர்கள்.

சா: அதை நான் மறுக்கிறேன்.

சத்: உங்களை நீர்வேலி வங்கிக்கொள்ளை பற்றி விசாரணை நடத்தும்படி பணித்தது எப்போது?

சா: சி. ஐ. டி. அதிபர் 81 ஏப்ரல் 6ம் திகதி என்னைப் பணித்தார். ஏ. எஸ். பி, ஜுராம்பதிக்கு உதவும்படி எனக்கு உத்தரவிடப்பட்டது.

சத்: நீர்வேலி வங்கிக் கொள்ளை விசாரணைக்கு யார் பொறுப்பாக இருந்தார்?

சா: சி. ஐ. டி. அதிபர் பொறுப்பாக இருந்தார். அடுத்து இருந்தவர் சிரேஷ்ட ஏ. எஸ். பி. மெண்டிஸ்.

சத்: ஏ. எஸ். பி. ஜுராம்பதிக்கு உதவுமாறு உங்களுக்கு உத்தரவு தரப்பட்ட சமயத்தில் அவ்விடத்தில் ஏ. எஸ். பி. ஜுராம்பதியும் இருந்தாரா?

(இக்கட்டத்தில் சாட்சி ஏதோ கூற முற்பட நீதிபதி சாட்சியைப் பார்த்து கேள்விக்கு ஆம், அல்லது இல்லை எனப் பதிலளிக்குமாறு கூறினார்).

சா: ஆம்.

சத்: சி. ஐ. டி. அதிபர் உத்தரவு தந்தபோது ஏ. எஸ். பி. ஜுராம்பதி அங்கிருக்கவில்லை என்பது சரியா?

சா: ஜுராம்பதியும் அங்கிருந்தார் என்றுதான் கூறினேன். இப்போது சரியாகக் கூறுகிறேன். ஏ. எஸ். பி. ஜுராம்பதி அப்போது இருக்கவில்லை.

சத்: சில சமயங்களில் உமது ஞாபகத்தில் தவறு ஏற்படுவது உண்டா?

சா: எனது ஞாபகத்தில் எனக்குத் திருப்தியுண்டு.

சத்: நடக்காத விஷயங்கள் எதுவும் உங்கள் நினைவில் இருக்குமா?

சா: இல்லை.

சத்: உங்கள் ஞாபகத்தைக் கொண்டுதானே இங்கு சாட்சியமளிக்கிறீர்களா?

சா: நான் இந்த சாட்சிக் கூண்டில் ஏறுவதற்கு முன் எனது ஞாபகத்தைப் புதுப்பித்துக் கொண்டேன்.

சத்: புதுப்பிக்கப்பட்ட ஞாபகத்தின் அடிப்படையில் தான் இங்கு சாட்சியமளிக்கிறீர்களா என்றே கேட்கிறேன்.

சா: ஆம்.

சத்: ஏப்ரல் 8ம் திகதி காலை ஏ. எஸ். பி. ஜுராம்பதியைச் சந்தித்தது அவரது காரியாலயத்திலா அல்லது வேறு எங்காவதா?

சா: அவரது காரியாலயத்தில்.

சத்: நீங்கள் அங்கு சென்ற போது என்ன நடந்தது?

சா: நான் ஜுராம்பதியைச் சந்தித்தபின் அவரோடு விசாரணைக்காக புறப்பட்டுச் சென்றேன்.

சத்: 3ம் எதிரியிடம் வாக்குமூலம் பதிவுசெய்வதே நாம் செய்யவேண்டிய காரியம் என்று ஜுராம்பதி கூறினார் அப்படித்தானே?

சா: ஆம்.

சத்; 3ம் எதிரி அதற்கு முன் யாழ்ப்பாணத்தில் ஏதாவது வாக்குமூலம் பொலிசாருக்குக் கொடுத்திருக்கிறாரா எனக் கேட்டீரா?

சா: இல்லை.

சத்: அவர் வாக்குமூலம் ஏற்கனவே கொடுத்துவிட்டார் என ஜுராம்பதி கூறினாரா?

சா: அவரும் கூறவில்லை. ஆனால் வழமையான நடைமுறை சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டால் அவரது நிலைமை பற்றி (குற்றச்சாட்டுகளை) அவருக்கு விளங்கப்படுத்திவிட்டு அவரது வாக்குமூலத்தைப் பெறுவதுதான்.

சத்: வழமையான நடைமுறை அதுவானால் 3ம் எதிரி யாழ்ப்பாணத்தில் வாக்குமூலம் கொடுத்தாரா இல்லையா என அறிய முனைந்தீரா?

சா: அதுபற்றிப் பின்னர் அறிந்துகொண்டேன்.

சத்: இதுபற்றி நீரும் ஜுராம்பதியும் பேசிக்கொள்ளவில்லையா?

சா: இதுபற்றி நாம் பேசிக்கொள்ளவில்லை.

சத்: 11ம் திகதிதான் 3ம்எதிரியை முதன் முதலில் விசாரித்தீர்? எத்தனை மணிக்கு அப்படி விசாரித்தீர்கள்? அவசியமானால் உமது குறிப்புப் புத்தகத்தைப் பார்த்துப் பதில் சொல்லவும்.

சா: மாலையில் 5-30க்குவிசாரணையை ஆரம்பித்திருக்கலாம். இரண்டரை மணித்தியாலம்வரை தொடர்ந்து விசாரித்திருப்பேன்.

## திருமூலர்,..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரம் போன்ற நாம் போற்றும் நூல்களிலும் காணப்படுகின்றன. ஆதலால் தாயுமானவர் பாடலை ஓதுவதனால் தமது உலகியல் முன்னேற்றம் பின்னடைந்துவிடுமென எண்ணத் தேவையில்லை.

தாயுமானவர் வேதாந்தியா, சித்தாந்தியா? வேதாந்தியா? வேண்டாம். சித்தாந்தியா? வேண்டாம். என வீண் வாதாடி நேரத்தைக் கழித்த காலமொன்று இருந்தது. திருமூலர் திருமந்திரம் இத்தகைய வாதத்திற்கு என்றோ விடை பகர்ந்துவிட்டது. வேதாந்தத் தெளிவு சைவசித்தாந்தம் என்பதே விடை.

சைவசித்தாந்த சாகரமாக விளங்கிய மேலைப்புலோலி கதிரவேற்பிள்ளை ‘தாயுமான வள்ளல் இரு சரணமலர் சிரமதனிற்றரித்து வாழ்வாம்’ என்கின்றார். சென்னை, பூவை கலியாணசுந்தர முதலியார் தாயுமானவர் திருப்பாடல்களுக்கு அரிய பெரிய மெய்கண்ட விருத்தியுரை எழுதியுள்ளார். அவ்வுரை சித்தாந்தச் சைவநெறியின் நுட்பத்தை அறிய அவாவுவார்க்கு அரிய துணையாகும்.

பொன் விழாக் கண்ட தமிழ் வார ஏடு ஆனந்தவிகடன் தனது இலட்சியவாக்காகத் தாயுமானவரின் ‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயே’ கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே அவரவர் தகுதிக்கு ஏற்ற உபதேசங்களைக்கொண்டிலங்கும் தாயுமானவரின் தெய்வப்பாடல்களை நாமும் தினந்தினம் ஓதி உணர்ந்துநல் வாழ்வுக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்.

# தேசிய ஒற்றுமையை வளர்க்க முக்கியத்துவமளித்துள்ளோம்

### பிரதமரின் சுதந்திரதினச் செய்தி

(கொழும்பு)

“எமது மக்கள் எங்குதான் வாழ்ந்தாலும் கிராமத்தில் நகரத்தில் அல்லது கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எங்கிருந்தாலும் அவர்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதே எமது தலையாய நோக்கமாகும்”

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா இலங்கையின் 35வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அச்செய்தியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:

“தேசியஒற்றுமையை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். எனினும் நாம் அனைவரும் ஒருதாய்நாட்டின்குழந்தைகள் என்ற உணர்வை எழச்செய்ய இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது.

“சுதந்திரதேசமாக நாம் மேலும் ஒரு ஆண்டில் பிரவேசிக்கும்போது பாரிய பொறுப்புக்களும், புதிய சவால்களும் எம்மை எதிர்நோக்குகின்றன

“இவ்வருட சுதந்திரதினம் விசேட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இன்று 35-வது சுதந்திரதினத்தை மட்டும் நாம் நாடெங்கும் கொண்டாடவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவின் பதவிப் பிரமாண வைபவத்தையும் நாம் கொண்டாடுகிறோம்.

“ஜனநாயகத்தையும் சுதந்திரத்தேர்தலையும்கடைப்பிடிக்கும் நாடுகளுள், எமது ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ள மக்கள் ஆதரவு அமோகமான தாகும்.

“ஜனநாயகத்தைப் பின்பற்றும் எமக்கெல்லாம் இது பெருமையையும் திருப்தியையும் அளித்துள்ளது” என்றும் பிரதம மந்திரி தெரிவித்துள்ளார். (வெ)

## மக்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாவுமான திரு. சு. நாகேந்திரரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அவர்காட்டிய அக்கறை நெடுந்தீவு மக்கள் பால் அவர் கொண்டிருந்த அபிமானத்தை நன்கு புலப்படுத்தும். நெடுந்தீவு மக்களின் தேவைகளை அறிந்து அவரால் ஆரம்பிக்கப்பட்ட— நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள் இன்று பூரணத்துவம் பெற்றுள்ளன.

தனது தாபனத்தில் பெருந்தொகையானவர்களுக்குவேலை வசதிகளை வழங்கிய அவர், தம்மிடம் வருவோருக்குஇல்லை என்று கூறாத இதயம்படைத்தவர். இரு தடவைகள் தீவுப் பகுதிப் பிரதிநிதியாக சேவை புரிந்த திரு. தம்பிஐயா அரசியலைவிட்டு ஒதுங்கியபோதும் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை மறந்தவரல்லர். 1958ல் ஏற்பட்ட இனக்கலரத்தின்போது தலைநகரில்துணிவுடன் உலவி அகதிகள்முகாம்களுக்கு விரைந்துஅவர்களுக்கு ஆற்றவேண்டிய அனைத்து உதவிகளையும் தாமதமின்றி வழங்கியதுடன் தனது கப்பல்களைப் பயன்படுத்தித் தமிழ் மக்களைத் தமிழ் மண்ணில் கரைசேர்த்தார். நெடுந்தீவு மக்களும் கடல் கடந்தே பிரதான நகருக்குச் செல்லவேண்டும் என்பதால் 1954ல் பிரமர் சேர் ஜோன் கொத்தலாவலையை நெடுந்தீவுக்கு அழைத்து இராஜேஸ்வரி படகுச் சேவையை ஆரம்பித்து வைத்ததின்மூலம் நெடுந்தீவு கடல்போக்குவரத்தில் புதிய திருப்பத்தை உருவாக்கினார்.

கந்தரோடை

# தமிழ்க்கந்தையா பாடசாலை

## ஸ்தாபகர்தினம், பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் ஸ்தாபகர் தினம், பரிசளிப்பு விழா, புதிய அலுவலக கட்டடத் திறப்பு விழா, டாக்டர் சி. சுப்பிரமணியம் உருவப் படத் திரை நீக்கம் முதலியன நாளை நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். புதிய அலுவலகக் கட்டிடத்தை திரு. வி. தர்மலிங்கம் எம். பி. திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினராக திரு. ச. தனஞ்சயன் கலந்து கொள்வார்.

வைத்திய கலாநிதி ஆ. நடராசா ஸ்தாபகர் நினைவுரை நிகழ்த்துவார். ஸ்தாபகர் அ. கந்தையா உபாத்தியாயரின் உருவப் படத்தை இளைப்பாறிய உப அதிபர் திரு. வே. அப்புத்துரை திரைநீக்கம் செய்வார்.

இவ்வித்தியாலய முன்னாள் முகாமையாளர் வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியத்தின் உருவப் படத்தை திரு. வே. சி. சிவபாலசிங்கம் திரைநீக்கம் செய்வார்.

### தமிழ்க் கந்தையா உபாத்தியாயர்

அமரர் அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர் அவர்களால் 1894 ஆம் ஆண்டு இவ்வித்தியாசாலை ஸ்தாபிக்கப் பெற்றது. நாவலர் பெருமான் காட்டிய சிவநெறி கடைப்பிடித்த ஒழுக்கத்தாலும், சுன்னாகம் திரு அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் மெய்ந்நூல்களை ஐயந்திரிபறக் கற்றுப் பெற்ற அனுபவத்தாலும் கந்தரோடையில் உள்ள சிறுவர்களின் கல்வி தாய்மொழி மூலம் வளம்பெறவேண்டியும், அதன் வாயிலாகச் சைவசமய ஒழுக்கத்தை நிலைநாட்டக்கருதியும் இப்பாடசாலையை ஸ்தாபித்துத், திறம்பட நடாத்தினார். அத்துடன் அமையாது நாற்பதாண்டுகள் வரை இப்பாடசாலையிலேயே தலைமை ஆசானாக இருந்து தம்வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணி புரிந்தார்.

இவ்வித்தியாலயம் ஆரம்பித்த நாள்முதல் ஸ்தாபகரின் உற்ற நண்பரும், நெருங்கிய உறவினரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகருமாகிய சி. கந்தையா உபாத்தியாயர் அவர்களை முகாமையாளராக நியமித்தார். பின் 1943 ஆம் ஆண்டில் அவர் நோய்வாய்ப் பட்டமையால் "P. S." எனப் பொதுமக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட வைத்திய கலாநிதி சி. சுப்பிரமணியம் அவர்களை முகாமையாளராக நியமித்துப் பாடசாலையைத் திறம்பட நடாத்தினார். 1951ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் திகதி இப்பாடசாலையின் ஸ்தாபகர் திரு. அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

# காங்கேசன் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக திரு. கே. ஆர் இராமச்சந்திரன் பதவி ஏற்றுள்ளார்.

ஏற்கனவே இங்கு பொறுப்பதிகாரியாக கடமை புரிந்த திரு. பொ. இராமநாதன் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து இவர் பதவி ஏற்றுள்ளார்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராக யாழ்ப்பாணத்தில் 3 வது உதவிப் பொலிஸ் அதிபராகவிருந்த திரு. பிரேமரத்தினவே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள்

# சங்கமும் கண்டனம்

(ஊர்காவற்றுறை)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் சமீபத்தில் நெல்லியடியில் இராணுவத்தினர் சிலரால் அவமதிக்கப்பட்டது தொடர்பாக கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கைஎடுக்குமாறு ஜனாதிபதிக்கு அவசரத் தந்திமூலம் இச்சங்கம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கத்தின் அவசரப் பொதுக்கூட்டத்தில் நெல்லியடிச் சம்பவம் தொடர்பாக சங்கம் தனது தீவிரமான அக்கறையை தெரிவிக்கின்றது எனவும், சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது ஜனாதிபதி கடுமையான தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சங்க உபதலைவர் சட்டத்தரணி இ. சபேசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இத்தீர்மானம்சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவினால் முன்மொழியப்பட்டு சட்டத்தரணி ரி. தனராஜசிங்கத்தால் வழிமொழியப்பட்டது.

இத் தீர்மானத்தின் பிரதி இலங்கை சட்டத்தரணிகள்சங்கத் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கிச் சூட்டுக்கு குடும்பஸ்தர் பலி!

[துணுக்காய்]

இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 3 பிள்ளைகளின் தந்தை இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

இச்சம்பவம் வவனிக்குளம் பகுதியிலுள்ள கொல்லவிளான் குளம் என்னும் சிறுகிராமத்தில் நடந்துள்ளது.

சம்பவதினம் துவக்குகள், கத்திகள் சகிதம் இரவுவேளை 4 பேர் வீட்டில்புகுந்ததாகவும் வீட்டிலுள்ள நாயின் சத்தம் கேட்டு எழுந்த அந்த வாலிபர்களை விரட்டியதுடன் ஒருவருக்கு இருட்டுவேளையில் பலமாகத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாலிபர் அவர்களைத் தாக்கியதுடன் சிறிதுதூரம் விரட்டிச் சென்றதாகவும், பின்னர் பற்றை மறைவில் ஒழிந்து இருந்த இன்னுமொருவர் ஆத்திரம்கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்தெரிய வருகின்றது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் அவ்விடத்திலேயே மரணமானார்.

மனைவி பிள்ளைகளின் அவலக்குரல் கேட்டு அயலவர் ஓடிவரவே திருடர்கள் காடுகளில் ஓடி மறைந்து விட்டனராம். விடிந்ததும் மாங்குளம் பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்தனர் அத்துடன் காடுகளில்பலத்ததேடுதல்வேட்டை நடைபெற்றது. வவனியா உதவிப் பொலிஸ் அதிபரும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினார்.

மரண விசாரணையில் கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. கொலையாளர்களைத் தேடி மாங்குளம் பொலிசார் காடுகளில் தீவிரவேட்டை நடாத்தி வருகிறார்கள்.


சென்னை - ரூபவாகினி

நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டுகளிக்க

தொலைக்காட்சி ஏரியல் அமைப்பிற்கு

வீனஸ், நியூவீனஸ்

ரி. வி., றேடியோ, மணிக்கூடுகளை உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி. வி., றேடியோ மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்,

விரும்பிய பாடல்களை பதிவுசெய்து கொள்ளவும்,

மற்றும் மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்;

மேலும் யாழ். நகரில் உத்தரவாதத்துடன்

ரி. வி. ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

நியூவீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


வரட்சி

# நிவாரணம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பத்து கிராமோதய சபைப் பிரிவுகளிலும் நடைபெறும் வரட்சி நிவாரணத் திட்ட வேலைகளுக்கான நிவாரணப் பணம் உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்படவிருக்கின்றன.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகரராசா சிரமதானப்பணி நடைபெறும் கிராமங்களுக்குச் சென்று இந்த நிவாரண உதவிப்பணத்தை வழங்கிவருகின்றனர். [ச]

வவனியா கோர பஸ் விபத்து:

# "தகுதியற்ற பஸ்களினாலேயே விபத்துகள் ஏற்படுகின்றன"

(வவனியா)

ஓடமுடியாத பஸ் வண்டிகளை வவனியாவில் சேவைக்கு ஈடுபடுத்துவதினால்தான் விபத்துக்குள்ளாகிப் பிரயாணிகள் பலியாகின்றனரென்று வவனியா பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. என். சேனாதிராஜா கவலை தெரிவித்தார்.

மன்னார் வீதி 4ம் கட்டை என்னுமிடத்தில் இ. போ. ச. பஸ்வண்டி விபத்துக்குள்ளாகி இருவர் பலியாகியது குறித்து அவர் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின்போது ஸ்தலத்திலேயே மரணமான மூர்த்தி என்பவரின் மரண விசாரணை வவனியா மாவட்ட பதில் நீதிபதி திரு. ஆர். வி. வில்வராசா முன்னிலையில் வவனியா ஆஸ்பத்திரியில் நடந்தது.

காயப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுபவர்கள் 42 பேரும் விசாரணையின் போது சாட்சியமளித்தார்கள்.

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் சோ. நிரஞ்சன் மேற்கொண்டார்.

இறுதியில் பதில் நீதிபதி பிரேதங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிசாரைப் பணித்து, விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (அ)

# ரூ.18,000 நகை கொள்ளை!

[மாவிட்டபுரம்]

வீட்டில் எவருமில்லாத வேளை ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருட்டுப் பேர்வழிகள் அலுமாரியிலிருந்த 18 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

வீமன்காமம் தெல்லிப்பழையில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. இளைப்பாறிய ஆசிரியரான கிருபைராஜா செல்வராஜாவும் மனைவியும் வீட்டில் இல்லாத நேரத்தில் கூரை ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அலுமாரியிலிருந்த தங்கச்சங்கிலிகள், தோடு, காப்பு, மோதிரம் போன்ற 18 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிக்கொண்டு கம்பிநீட்டிவிட்டார்களாம்.

காங்கேசன்துறை பொலிசில் இது பற்றி புகார் செய்யப்பட்டுள்ளதையடுத்து காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. ஐயாத்துரை தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணையில்இறங்கியுள்ளது.

# நீரில் மூழ்கி மரணம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைக் கடலில் மூழ்கி மரணமான வாலிபரின் மரணம் தொடர்பாக இடம்பெற்ற மரணவிசாரணையில் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்துமரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசன் துறை புதிய துறைமுகப்பகுதியில் நிலக்கரி இறக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த வாலிபர்கள் மூவர் உல்லாசமாகக் கடலில் நீந்திச் சென்றபோது ஒரு வாலிபர் நீரில் மூழ்கிக் காணாமல்போயிருந்தார். காரைநகர் கடற்படை சுழியோடிகளின் உதவியுடன் இவரைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு இறுதியாக மேற்படி புதிய துறைமுகப் பகுதியில் சுழியோடியாகக் கடமைபுரியும் என். நாராயணசுவாமி என்பவரால் இவரது சடலம் கடலுக்கடியிலிருந்து மீட்கப்பட்டது.

கொக்குவிலைச் சேர்ந்த நாகராஜா ஜெகன்மோகன் (21 வயது) என்னும் இந்த வாலிபரின் சடலத்தை அவரது தந்தை முத்துக்குமாரு நாகராஜா அடையாளம் காட்டினார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சித்திரவேல் விசாரணை நடத்தினார். சாட்சியங்களையடுத்து நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் கந்தசாமி, நிர்மலகுமார் விசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.



# ஒரு தியாகச் சுடர்!

சைவமுந் தமிழும் தழைத்தோங்கும் ஈழவள நாட்டில் தெய்வமணம் கமழும் அளவெட்டி என்னும் திருப்பதியில், புகழ்பூத்த கல்விப் பெருங்குடியில் தோன்றிய 'அமரர்' சரவணமுத்து அவர்கள் யாழ். நகரின் புகழ்பரப்பும் இந்துக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி பயின்று புலமை பெற்ற பின், தொடர்ந்தும் ஆங்கிலத்தில் மேற் கல்வியைத் தொடராமல், சைவமும் தமிழும் தழைய வேண்டி, திருநெல்வேலி, சைவாசிரியர் கலாசாலையில் சேர்ந்து ஆசிரிய பயிற்சியைப் பெற்றுத் [illegible] தமிழாசிரியராக வெளிவந்தார்,

'இந்துபோட்' என வழங்கும் யாழ்ப்பாணம் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தலைமை நிலையமான திருநெல்வேலியில் நிறுவப்பட்டுள்ள முத்துத்தம்பி வித்தியாலய அதிபராய் அதனோடிணைந்து விளங்கும் சைவ அனாதசாலையையும் பொறுப்பேற்று நடாத்தும் பெரும்பணி 'அமரர்' சரவணமுத்து அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது என்ன புதுமை. 'அமரரின் ஆளுமையில் முத்துத் தம்பி வித்தியாலயத்தின் பெரும்புகழ் எங்கும் பட்டொளி வீசிப் பறந்தது.

வடலிடைப்பு சித்திவிநாயகர் தேவஸ்தான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் பணியேற்ற இப்பெருந்தகை ஆற்றிய ஆலயத்திருப் பணிகள் அனந்தம் சித்திரத் தேர்த்திருப்பணியுடன் இராசகோபுரங் கண்ட பெருமையும் பெற்றார். அளவெட்டியில் வாழும் அண்ணர் மயில்வாகனம் அவர்களையும், அவரின் பரிபாலனத்தில் அருள் விளங்கும் கும்பழாவளைப் பிள்ளையாரையும் 'அமரர்' என்றுமே மறந்ததில்லை.

சமூக ஈடுபாடுகளில் அக்கறை கொண்ட இவர், உள்ளூரில் நிகழும் சகல நிகழ்ச்சிகளிலும் பெரும் பங்கு கொண்டு உழைக்கும் பேராளராக விளங்கினார். தெய்வசிந்தனையுடன் நடமாடும் தெய்வமாக விளங்கிய இவர், ஓர் அற்புதமான தியாகச் சுடர்!

-அன்பன்-

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
(கலர்)
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Body Heat
(Adults only)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திர முதலமைச்சர்
என். டி. ராமராவ், ஜெமினி
சாவித்திரி நடித்த
மாயா பஜார்

ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா-
முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

# பரு. கிழக்கு அபிவிருத்திபற்றி கூடி ஆராய்வர்

[பச்சிலைப்பள்ளி]

பருத்தித்துறை கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை அலுவலகத்தில் இம்மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலின் போது, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை பாராளுமன்றஉறுப்பினர் திரு. க. துரைரத்தினம் ஆகியோரும் சமுகமளிப்பர்.

இக்கலந்துரையாடலுக்கான ஒழுங்கினை மாவட்டசபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து ஆழியவளைக் கிராம அபிவிருத்திச்சங்கத்தின்வேண்டுகோளை அடுத்து மேற்கொண்டுள்ளார். [அ]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
7-2-83 வரை
நீலமலர்கள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும்
ரயில் (கலர்)

றீகல் (யாழ். நகர்)
கடைசி
சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

# பரத நாட்டிய அரங்கேற்றம்



அரஸ்கோ நிர்த்தனலய அதிபர் நாட்டியக் கலைமணி செல்வி நளினி அரசரத்தினத்தின் மாணவிகளான செல்வி சோபனா குகதாசன், செல்வி கவிதா குகதாசன் ஆகிய இருவரினதும் பரதநாட்டிய அரங்கேற்றம் பெப்ரவரி 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்செல்வி சாந்தா பொன்னுத்துரை (யாழ். நுண்கலை வளாகம்) அவர்களின் தலைமையில் நடைபெறும். யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி ஐ. கருணானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். செல்விகள் கவிதாவும் சோபனாவும் யாழ். கொழும்பு ஸ்ரூடியோ உரிமையாளர் திரு. அ. குகதாசன் திருமதி நேசம்மா குகதாசன் தம்பதிகளின் புதல்விகளாவர்.

# இன்றைய பலன்

தை மாதம் 23-ந் திகதி
சனிக்கிழமை
(5—2—83)

மேடம்-போதுமென்றமனத்துடன் புறப்படுவீர்கள். பிறருக்கு உழைப்பினால் உவகை ஏற்படமுடியும், சிலர் வேதாந்தப் போக்கை விரும்புவர்.

இடபம் - நண்பர்களின் ஆசைவார்த்தைகளில் மயங்க வேண்டாம், தொழில்துறையில் வருமானம் மிகவும் மட்டாகவே இருக்கும்.

மிதுனம்- நீண்டகாலத்தின் பின் இன்று மனதுக்குப்பிடித்த ஒரு சம்பவம் நடைபெறும், முதியவர் ஒருவர் உமக்கு வழிகாட்டியாக இருப்பார். ஆலய வழிபாட்டில் ஆர்வம் பிறக்கும்.

கடகம்- கடமையில் முதலிடம் கிடைக்கும், பதவியில் உயர்வுக்கு இடமுண்டு. வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும், வெல்லம்போல் வாழ்வு இனிக்கும்.

சிங்கம்-புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள், தெய்வத்தின் அருள் கிடைக்கும், தங்கள் செயற்திறமை மற்றவர்களைத் திகைக்கவைக்கும்.

கன்னி-நான் என்ற அகம்பாவம் தலைதூக்கி நிற்கும், வேண்டிய ஒருவரின் ஆலோசனையைக் கேட்காததால் பின்பு வருந்த நேரிடும், எதிலும் கவனம்வேண்டும்.

துலாம்-சிந்தனை புதிர் போடும். சிறிவரும் கோபம் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ளநேரிடும், தொழிலில் தொல்லைகள் அதிகரிக்கப்படும், அமைதி நன்று.

விருட்சம்-பெரிய இடத்தில் சிநேகிதம் ஏற்படலாம், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும், புதுவழிகளின்மூலம் பணம் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கிடைக்கும்.

தனு-இலட்சியப் போக்கினால் பல தவறுதல்களுக்கு இடமேற்படக்கூடும். பிடிவாதக் குணம் சந்தர்ப்பங்களைக் கெடுத்துவிடும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நன்று.

மகரம்- அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏற்படும், புலவர்கள் போற்றப் படுவார்கள், புதிய வாகனம் கிடைக்கலாம்.

கும்பம்-கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ்பரவும், சிலர் புதிய முதலீடுசெய்வதில் ஈடுபாடுவார்கள் பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவார்கள்.

மீனம்- துன்பத்தினால் வாழ்வை இழக்கநேரிடலாம். எதிலும் தயக்கநிலை உருவாகும், ஆதரவு கொடுத்தவர்கள் முடிவில் கையை விரிக்கக் கூடும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.


## பாடசாலை அனுமதி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே நாம் பெற்றோரிடம் இவ்வாறு கட்டணம் அறவிடுகின்றோம்' என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டதாக மேற்படி பெற்றோர் தெரிவித்தனர்.

அரசாங்கம் பாடசாலை மாணவருக்கு இலவசமாக பாடப்புத்தகங்களை வழங்கி இலவசக் கல்வியை ஊக்குவித்துவரும் இக்காலகட்டத்தில் பாடசாலையில் மாணவரை அனுமதிக்கச் செல்லும் பெற்றோரிடம் நிதி சேகரிப்பது முறையாகுமா? அந்த ஏழைப் பெற்றோர் கவலையுடன் கேள்வி எழுப்பினர்? [க]

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-45



ஆந்திர முதலமைச்சர் N. T. ராமராவ்
K. மாலதி - S. V. ரங்கராவ் - ரேலங்கி
நடித்த
பாதாள பைரவி
மந்திரம் தந்திரம் மயிர்கூச்செறியும் பயங்கரச்சண்டைகள்,
காதல் காட்சிகளை வெண்திரையில் காணத்தவறாதீர்கள்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) கடைசித் தினம் 6-2-83
தினசரி 5 காட்சிகள் LAST TWO DAYS
CARLO PONNAMPALAM PRESENTS
Robert Shaw — Lee Marvin in
AVALANCHE EXPRESS
ACTION—THRILLER—SCOPE—COLOR

✶ இன்றைய தேர்தல் முடிவுகட்டும்!

# இந்திராவிடமிருந்து டில்லி கைநழுவுமா?

புதுடில்லி, பெப் 5

இந்தியாவின் தலைநகரான புதுடில்லி, ஆளும் கட்சியிடமிருந்து எதிர்க்கட்சிகளின் கைகளுக்கு மாறிவிடுமா என்ற கேள்விக்குறியை இன்று அங்கு நடக்கும் முக்கிய உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் அரசியல் வட்டாரங்களில் கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது

புதுடில்லியிலுள்ள 50 நகரராட்சிமன்ற உறுப்பினர்களையும் 100 மாநகரராட்சி மன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்குத் தேர்தல் நடக்கிறது.

இந்திராகாங்கிரஸ்வசம் இதுவரைகாலமும் இருந்துவந்த புதுடில்லி, ஆந்திரா, கர்னாடகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து இங்கும் ஒரு பெரியமாற்றம் நிகழலாம் என்ற சந்தேகம் முழு இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ளது.

திருமதி இந்திரா, அவரது மகன் ராஜீவ்காந்தி முழுமூச்சாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். ஜனதா, லோக்தள் ஆகிய எதிர்க்கட்சிகள் கூட்டாக இந்திராகாங்கிரசை நேருக்கு நேர் சந்திக்கின்றன.

ஜனதா சார்பில் திரு. வாஜ்பேய், லோக்தள் சார்பில் திரு சரண்சிங் ஆகியோர் இந்திராகாங்கிரசுக்கு எதிராகப் பிரசாரத்தை செய்தனர்.

ஹர்த்தால் - தேசிய துக்கதினம்

# தமிழ்ஈழ விடுதலை அணி நன்றி கூறுகிறது

(யாழ்ப்பாணம்)

''தமிழ்மக்களின் விடுதலை உணர்வுகளையும், எதிர்ப்புக்களையும் தெரிவிக்கும்வகையில் தமிழீழ விடுதலை அணியினர் விடுத்தவேண்டுகோளை ஏற்று நேற்றும், நேற்று முன்தினமும் முறையே ஹர்த்தாலாகவும், துக்கதினமாகவும் அனுஷ்டித்தமைக்காக தமிழீழ மாநிலங்களில் உள்ள பொதுமக்கள், வணிகர், மாணவ மாணவிகளுக்கு நன்றி கூறுகின்றோம்'' என்று தமிழீழ விடுதலை அணி செயலாளர் திரு. ஈழவேந்தன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

''ஒரு காலத்தில் சட்டத்தரணிகளும் பாராளுமன்ற பதவியில் இருப்போருமே தமிழ் இனத்தை வழி நடத்த வேண்டும் என்ற நிலை இருந்தது. இப்பொழுது காலம் மாறி மக்களோடு மக்களாக நெருங்கிப் பழகும் சாதாரணத்தலைவர்களும் உள்ளத் தூய்மையோடும், செயல்துணிவோடும் இயங்கும் மக்களும் செவிசாய்ப்பார்கள் என்பதற்கு நடைபெற்ற ஹர்த்தால், துக்கதின நிகழ்ச்சிகள் சான்றாக அமைகின்றன'' என்றும் திரு. ஈழவேந்தன் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

## மன்னாரில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். விடுதலை புனிதமான சொல். புனிதமான விடுதலையைப் பெறவே இந்த உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படுகிறது'' என்றார்.

## யாழ். செய...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

திரு. எஸ் சிவநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மாவட்டப் பணிப்பாளர் திரு. ஏ. பாலசிங்கம், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் திரு. என். சண்முகசுந்தரம் ஆகியோர் உட்பட பல அதிகாரிகள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மாணவிகள் தேசியகீதம் இசைத்தனர். இதைத் தொடர்ந்து பாற்சாதம் பால் ஆகியன வழங்கப்பட்டன.

[வண: நிரு]

## கட்டுவனில் முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் கிராமோதயசபை முதியோர் தினவிழா இன்று மாலைஏழாலைவடக்குஅ. மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கிராமோதயசபைத் தலைவர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், பிரதேசசபைத்தலைவர் திரு. சி. சிவமகராசா, தமிழ் இளைஞர் பேரவை இளைஞர் அமைப்புச்செயலாளர் திரு. மாவை சேனாதிராசா உட்பட பலர் உரை நிகழ்த்துவர். இவ்விழாவில்முதியோர்களைக் கௌரவித்து எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அன்புபளிப்புகள் வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(மா)

## மரண அறிவித்தல்

### செல்வி நவீனு கனகதுங்கம்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி நவீனு கனகதுங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி Bonnei கனகதுங்கத்தின் அருமை மகளும் சந்திரன், அருந்ததி, விமலா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை சாவகச்சேரி திருச்சபைமண்டபத்தில் இன்று 5-2-83 சனிக்கிழமை பி. ப. 4 - 00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு: மேற்படி ஆராதனையிற் கலந்து கொள்வதற்காக கல்லூரி மாணவிகள் அனைவரும் பாடசாலை மண்டபத்தில் சனிக்கிழமை 5-2-83 பி. ப. 2-00 மணிக்கு கூடுமாறு வேண்டப்படுகின்றனர்.

திருமதி G பரராஜசிங்கம்
அதிபர்

6096

## அனைத்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யோரை விடுதலை செய்ய வேண்டும் அல்லது சாதாரண சட்டத்தின்கீழ் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும்! என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களில் 50 பேர் முதல் கட்டமாக உண்ணாவிரதம் இருந்தனர்,

### பழரசம் அருந்தினர்

நேற்று பிற்பகல் 4 மணிக்கு நான்குநாட்கள் உண்ணாவிரதமிருந்த 50 மாணவர்களுக்கும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் அன்னையர் இருவர் பழரசம் கொடுத்து முடித்துவைத்தனர்,

நேற்று நடைபெற்றஉண்ணாவிரதத்தில் அம்பிட்டியா மறைக்கல்வி போதகர் வண பிதா இம்மானுவல் உள்ளிட்டு பல மதகுருமார், கன்னியாஸ்திரிகள், பாடசாலைமாணவர்கள், பெற்றோர்கள்,பல்கலைக்கழக பணியாளர் சங்கத்தினர், தமிழீழ விடுதலை அணியினர், ஈழமாணவர் பொது மன்றத்தினர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்,

### தென்னிலங்கை மாணவர் தலைவர்கள்

தென்னிலங்கையைச் சேர்ந்த பேராதனைஉட்பட கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர, களனி, மொறட்டுவ ஆகிய பல்கலைக்கழகங்களின் தலைவர்கள் திரு ஆர் பி வணசிங்க திரு எல் கே சிறிசேன, திரு உபாலி ஜெய்வீர, திரு திலக்பெர்னாண்டோ, திரு லக்சன்பெரேரா திரு டீப்தி லமஹேவ ஆகியோரும், ஈழமாணவர் பொது மன்ற நிர்வாக செயலாளர் திரு டேவிட்சன் முன்னாள் மாணவர் அவைத்தலைவர் பல்கலைக்கழக பணிப்பாளர் சங்க உறுப்பினர் திரு, என், கணேசலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்,

### தமிழ் இளைஞர் பேரவை

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தொகுதி அமைப்பாளரும் தமிழ் இளைஞர் பேரவை இளைஞர் இயக்கச்செயலாளருமான திரு, மாவை சேனாதிராசா, யாழ், அபிவிருத்திசபை உறுப்பினர் திரு, ந் இராசேந்திரன் யாழ்,பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு,ஆ பொன்னையா, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் திருமதி நிர்மலா நித்தியானந்தன் உறவினர்களும் உண்ணாவிரதத்தில் இருந்தனர்,

முதல் கட்டமாக தொடர்ந்து நான்கு நாட்கள் உண்ணாவிரதமிருந்த மாணவர்களின போராட்டம் நேற்று நான்கு மணிக்கு முடிவடைந்ததும், 2-ம் கட்டமாக 50 மாணவ மாணவிகள் உண்ணா விரதமிருக்கத்தொடங்கினர், இதனையும் பல்கலைக்கழகமாணவர் அவைத்தலைவர் திரு. சிறீஸ்கந்தராசா தொடக்கி வைத்தார்,

(மா)

## ஈழ மாணவர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### கொக்குவில் உண்ணாவிரதம்

மாணவர்கள் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழீழ விடுதக்கழகத்தினர் நேற்றுக்காலை கொக்குவில் புதுக்கோவில் வீதியில் உண்ணாவிரதம் இருந்தனர்.

நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமான உண்ணா விரதம் பிற்பகல் 4 மணிக்கு முடிவுற்றது, அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

(மா)

# செல்வராசா அடிகளார் வெள்ளிவிழா

## பிரமுகர்கள் பலர் வாழ்த்தினர்

(யாழ்ப்பாணம்)

'எந்த நோக்கங்களுக்காக குருவாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ, அந்த நோக்கங்களுக்காக வாழ்பவர் அருட்திரு செல்வராசா அடிகள். அவரின் உழைப்பின் பரிசாக திகழ்வது வானுயர்ந்த பேராலயக் கட்டிடம்' என்று அருட்திரு ஜோசப் பொன்னையா இம்மனுவேல் செல்வராசா அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழாவில் மங்கல விளக்கேற்றி முதலில் நடந்த கூட்டுத்திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து யாழ். ஆயர் அதி. வண. பி. தியோகுப்பிள்ளை உரையாற்றுகையில் கூறினார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4-30-க்கு மேற்படி விழா ஆரம்பமானது, விழாவின் ஆரம்பத்தில், யாழ். ஆயர் மகா. வந். பி. தியோகுப்பிள்ளை, யாழ். மேற்றிராசனத்தின் பங்கு பிரமுகர்கள், பாடசாலை மாணவிகள், பொதுமக்கள் ஆகியோர் புடைசூழ அருள் திரு. செல்வராசா அடிகளார் மலர்மாலை சூடப்பட்டு ஊர்வலமாக யாழ். மேற்றிராசன தேவாலாத்துக்கு அழைத்து வரப்பட்டு கூட்டுப் பாடல் பூசைஒப்புக்கொடுக்கப்பட்டது

பூசை முடிவடைந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ, யோகேஸ்வரன், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ் மேயர் திரு. ஆர். விசுவநாதன், யாழ். பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் நேரடியாக சமூகம் கொடுத்து, அருள்திரு. செல்வராசா அடிகளாருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இவ்விழாவை முன்னிட்டு, ஞாபகார்த்த மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

### தேசியக்கொடிகள் அகற்றப்பட்டன

[மாவிட்டபுரம்]

சுழிபுரம் தபால் கந்தோர் முன்றலிலுப், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைஉபஅலுவலக முன்றலிலும் காலையில் ஏற்றப்பட்ட தேசியக்கொடிகள் சிலரால் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாணவருக்கு ஆதரவு தெரிவித்து

# சிங்கள, முஸ்லிம் மாணவர் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்

(மட்டக்களப்பு)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் நேற்று நடத்திய உண்ணாவிரதத்தில் பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்த சகல சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதம் பல்கலைக்கழக கல்லூரி வளவில் நேற்றுக்காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி மாலை ஆறுமணிக்கு முடிந்தது. மதகுருமார் பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பதிகள், இளைஞர்களை விடுவிக்கக் கோரி தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் உரை நிகழ்த்தினர்.

## பல ரக

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டதற்கு அத்தாட்சியாக முப்பதுக்கும் அதிகமான வெற்றுத் தோட்டாக்களை சம்பவம் நிகழ்ந்தஇடத்திலிருந்து பாதுகாப்புப்படையினர் நேற்றுக்காலை கண்டெடுத்தனர்,

'ஜீப்' பில் பதினைந்துக்கும் அதிகமான துப்பாக்கிச்சூட்டு அடையாளங்கள் காணப்பட்டன,

நேற்று நடைபெற்ற விசாரணைகளில்; சுமார் இருபதுபேர் வீதியின் இரு பக்கங்களிலுமிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கவேண்டும் என்றும் குறுகிய நேரத்தில் மிக வேகமாக இத்துப்பாக்கிப்பிரயோகங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் தெரியவந்துள்ளது,

துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஜீப்பின் கண்ணாடிகள் நொருங்கியதால் ஜிப்பிலிருந்த வடபிராந்திய ஓ, போ, ச, பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. எஸ், சிதம்பரப்பிள்ளையும் சாரதி திரு, எஸ், நவரத்தினமும் காயமடைந்தனர், இவர்கள் இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், சிகிச்சைபெற்று சாரதி நவரத்தினம் நேற்று வெளியேறினார்,

இத்துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக பொலிசாரும், இராணுவத்தினரும் கூட்டாக விசாரணையிலீடுபட்டுள்ளனர்,

வெற்றுத் தோட்டாக்களை பரிசோதனை செய்த ஆயுதப் படையினர் இந்தியாவில் இதேரக தோட்டாக்கள் காணப்படுவதாக அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

## எம். ஜி. ஆர் - கலை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இடை நேரத்தின் போது சட்டசபைபிரத்தியேக அறையில் இருவரும் தனித்துஇருந்து பேசியது அண்ணா தி மு க, தி. மு. க. உறுப்பினர்களையும், பத்திரிகை நிருபர்களையும் சிலநிமிட நேரம் இருவரும் இணையும் அறிகுறி உள்ளதோ என்ற ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது!

பதினைந்து நிமிட நேரம் நிகழ்ந்த இச்சந்திப்பின்போது கலைஞரின் உடல்நிலை குறித்து முதலவர் விசாரித்தார்.

கலைஞர் கடந்த பதினைந்து நாட்களாக சுகயீனமுற்று இருந்தார்.

## அடுத்த--.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பதியரும், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் தம்பதியரும வரவேற்றனர்,

பிரதம நீதியரசர் திரு. நெவில சமரக்கோன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நிகழ்ச்சி அமைச்சர்கள் எம். பிக்கள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர்.

இதற்கு முன்னதாக ஜனாதிபதி முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். 21 பீரங்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

இன்றும நாளையும் கண்டியில் சுதந்திரதினக்கொண்டாட்டங்கள் நடைபெறும்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன பதவியேற்று ஜனாதிபதி மாளிகைக்குத் திரும்பியதும், மாளிகை வாசலில் பொலிஸார் மரியாதை அணி வகுப்பு அளித்தனர். இந்த அணிவகுப்பில பொலிஸ்மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கமும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் கலந்து காண்டனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ... 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/83 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126